# PERIYAR ARTS COLLEGE, CUDDALORE-607001

## DISASTER MANAGEMENT CELL

**(Aapda Mitra)**

Primary function of the disaster management cell is to respond and coordinate immediately as and when disasters occur, take effective actions by providing relief and aid to the affected and enlighten citizens about the functioning of the cell by instilling a sense of confidence in their minds.

The cell co-ordinates with government departments such as Police, Fire and Rescue and District Administration during pre-disaster, disaster and post-disaster to carry out necessary vital functions.

Aapda Mitra trainings are provided to the volunteers to deal with disasters with competence and efficiency.

### Vision

To provide the volunteers with the skills that they would need to respond to their community's immediate needs in the aftermath of a disaster thereby enabling them to undertake basic relief and rescue tasks during emergency situations such as floods, flash-floods and urban flooding.

### Mission

- To train able-bodied volunteers in disaster response;
- To provide a personal protective equipment/emergency responder kit to each trained community volunteer.
- To create a Community Emergency Essential Resource Reserve containing essential light search and rescue equipments, medical first aid kits, etc.
- To coordinate with government departments such as Police, Fire and Rescue and District Administration during disasters.




**Aapda Mitra volunteers of Disaster Management Cell of Periyar Arts College**



**MLA of Cuddalore, Thiru. G. Iyappan visited the Disaster Management Cell of Periyar Arts College on 06.05.2023**

**Press News**

## பெரியார் அரசு கலைக்கல்லூரியில்

# "பேரிடர் கால நண்பன்" பயிற்சி முகாம்




கடலூர், மார்ச்.4-

கடலூர் தேவனாம்பட்டினம் பெரியார் அரசு கலைக்கல்லூரியில் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமையின் கடலூர் மாவட்ட பேரிடர் மேலாண்மை அலகு சார்பில் "பேரிடர் கால நண்பன்" பயிற்சி முகாம் தொடங்கியது. இதற்கு கல்லூரி முதல்வர் ஜோதி வெங்கடேசுவரன் தலைமை தாங்கினார். சமூகப் பணியியல் துறைத்தலைவர் சேதுராமன் வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக மாவட்ட வருவாய் அலுவலர் பூவராகன் கலந்து கொண்டு பயிற்சியை தொடங்கி வைத்தார். மாவட்ட வழங்கல் அலுவலர் உதயகுமார், கடலூர் மாவட்ட மேலாளர் மற்றும் பேரிடர் மேலாண்மை முகமை தாசில்தார் செந்தில்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிகழ்ச்சியில் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் கிருஷ்ணமூர்த்தி, மித்ரா, அருள்தாஸ், பெரியநாயகி, தேசிய மாணவர் படை அலுவலர் மனோகரன், இயற்பியல் துறை பேராசிரியர் கிறிஸ்டி பெர்டிணான்டு மற்றும் பல்வேறு துறைகளின் தலைவர், பேராசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கடலூர் பேரிடர் மேலாண்மை முகமையின் முதுநிலை வருவாய் ஆய்வாளர் கங்காதரன் நன்றி கூறினார்.

இதில் 110 மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு வருகிற 11-ந்தேதி வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமையின் பயிற்சியாளர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புக்குழுவினர், உடற்கல்வி பயிற்றுநர்கள், பொறியாளர்கள், மருத்துவர்கள், மயக்கவியல் நிபுணர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், வனத்துறையினர் மற்றும் பேரிடர் மேலாண்மையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் பங்கேற்று பயிற்சி அளிக்கின்றனர்.

*Daily Thanthi*, **04.03.2023**

# பேரிடர் மேலாண்மை பயிற்சி முகாம் நிறைவு

**நெய்வேலி, மார்ச் 12:** தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமையின் கடலூர் மாவட்ட அலகு சார்பில் 'பேரிடர் கால நண்பன்' என்ற தலைப்பில் 12 நாள்கள் நடைபெற்ற பயிற்சி முகாமின் நிறைவு விழா கடலூர் பெரியார் அரசு கலைக் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு கல்லூரி முதல்வர் சி.ஜோதி வெங்கடேசுவரன் தலைமை வகித்தார். நிதியாளர் ராஜகுமார் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மாவட்ட வருவாய் அலுவலர் ர.பூவராகன் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்கள், தன்னார்வலர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோ.உதயகுமார், பேரிடர் மேலாண்மை முகமை வட்டாட்சியர் வே.செந்தில்குமார் ஆகியோர் பயிற்சி பெற்றவர்களை பாராட்டினர்.




கடலூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பேரிடர் மேலாண்மை பயிற்சி முகாம் நிறைவு விழாவில் பங்கேற்றோர்.

கடலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே நடைபெற்ற இரு கட்டப் பயிற்சிகளில் 190 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தற்போது பெரியார் கலைக் கல்லூரியில் நடைபெற்ற 3-ஆம் கட்டப் பயிற்சியில் மாணவர்கள், தன்னார்வலர்கள் 110 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஒருங்கிணைப்பாளர் ஏ.செல்வகணபதி வரவேற்றார். கடலூர் பேரிடர் மேலாண்மை முகமை முதுநிலை வருவாய் ஆய்வாளர் சி.கங்காதரன், என்எஸ்எஸ் திட்ட அலுவலர் கே.அருள்தாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பேராசிரியர் நா.சேதுராமன் நன்றி கூறினார்.

*Dinamani*, **12.03.2023**

# பேரிடர் கால நண்பன் திட்ட பயிற்சி நிறைவு



கடலூர் அரசு பெரியார் கல்லூரியில் பேரிடர் கால நண்பன் திட்டப் பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது.

**கடலூர், மார்ச் 13:** கடலூர் அரசு பெரியார் கலைக்கல்லூரியில் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமையின் கடலூர் மாவட்ட பேரிடர் மேலாண்மை அலகு நடத்துகின்ற பேரிடர் கால நண்பன் என்ற ஆப்த மித்ரா திட்ட பயிற்சி 12 நாட்களுக்கு நடைபெற்றது. பயிற்சியின் நிறைவு விழா நடைபெற்றது. பெரியார் கலைக் கல்லூரி முதல்வர் ஜோதி வெங்கடேசுவரன் தலைமை தாங்கினார். கல்லூரியின் நிதியாளர் ராஜகுமார் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக மாவட்ட வருவாய் அலுவலர் பூவராகன் "பேரிடர் கால நண்பன்" பயிற்சியை நிறைவு செய்த மாணாக்கர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர் உதயகுமார், கடலூர் மாவட்ட மேலாளர் மற்றும் பேரிடர் மேலாண்மை முகமை வட்டாட்சியர் செந்தில்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கடலூர் மாவட்டத்தில் ஏற்கனவே நடைபெற்ற இரண்டு கட்ட பயிற்சிகளில் 190 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்ட நிலையில் தற்போது பெரியார் கலைக் கல்லூரியில் நடைபெற்ற மூன்றாவது கட்டப் பயிற்சியில் இரண்டு குழுக்களாக மொத்தம் 110 மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு 12 நாட்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 300 பேருக்கு "பேரிடர் கால நண்பன்" பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமையின் பயிற்சியாளர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புக்குழுவினர், உடற்கல்வி பயிற்றுநர்கள், பொறியாளர்கள், மருத்துவர்கள், மயக்கவியல் நிபுணர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், வனத்துறையினர் மற்றும் பேரிடர் மேலாண்மையில் நிபுணத்துவம் பெற்றோர் பங்கேற்று பயிற்சி அளித்தனர்.

புயல், வெள்ளம், சுனாமி, நிலநடுக்கம், தீவிபத்து போன்ற பேரிடர் காலங்களில் எவ்வாறு செயல்பட்டு மக்களை காப்பாற்ற வேண்டும், எவ்வாறு முதல் உதவி மற்றும் மருத்துவ உதவி செய்ய வேண்டும் என "பேரிடர் கால நண்பன்" பயிற்சியில் பங்கேற்றோருக்கு செயல்முறைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. முன்னதாக இப்பயிற்சியின் ஒருங்கிணைப்பாளரும் பயிற்சியாளருமான செல்வகணபதி வரவேற்றார். சமூக பணியியல் துறைத்தலைவர் பேராசிரியர் சேதுராமன் நன்றி கூறினார்.

*Dinakaran*, **13.03.2023**

தினத் தந்தி DAILY THANTHI
வெல்க தமிழ்



### கடலூர் அரசு கல்லூரியில்

# பேரிடர் கால நண்பன் பயிற்சி முகாம் நிறைவு

கடலூர், மார்ச்.13-

கடலூர் பெரியார் அரசு கலைக் கல்லூரியில் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமையின் "பேரிடர் கால நண்பன்" என்கிற ஆப்த மித்ரா திட்ட பயிற்சி முகாம் நிறைவு விழா நடந்தது. விழாவுக்கு கல்லூரி முதல்வர் ஜோதி வெங்கடேசுவரன் தலைமை தாங்கினார். கல்லூரி நிதியாளர் ராஜகுமார் முன்னிலை வகித்தார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட வருவாய் அலுவலர் பூவராகன் கலந்து கொண்டு "பேரிடர் கால நண்பன்" பயிற்சியை நிறைவு செய்த மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர் உதயகுமார், கடலூர் மாவட்ட மேலாளர் மற்றும் பேரிடர் மேலாண்மை முகமை தாசில்தார் செந்தில் குமார் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். பயிற்சியில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை முகமையின் பயிற்சியாளர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புக்குழுவினர் உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்தவர்கள் பயிற்சி அளித்தனர்.

புயல், வெள்ளம், சுனாமி, நில நடுக்கம், தீவிபத்து போன்ற பேரிடர் காலங்களில் எவ்வாறு செயல்பட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டும், எவ்வாறு முதல் உதவி மற்றும் மருத்துவ உதவி செய்ய வேண்டும் என்று பயிற்சி அளிக்கப்பட்டது. முன்னதாக பயிற்சி ஒருங்கிணைப்பாளர் செல்வகணபதி வரவேற்றார்.

இதில் கடலூர் பேரிடர் மேலாண்மை முகமை முதுநிலை வருவாய் ஆய்வாளர் கங்காதரன், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் அருள்தாஸ் உள்பட துறை தலைவர்கள், பேராசிரியர்கள், 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் சமூக பணியியல் துறைத்தலைவர் சேதுராமன் நன்றி கூறினார்.

## இன்றைய நிகழ்ச்சி

தி.மு.க. பொதுக்கூட்டம்
இடம்: விருத்தாசலம் கொடுக்கூர், பெண்ணாடம் வால்பட்டறை, மங்கலம்பேட்டை
நேரம்: மாலை 4 மணி

★★★

கிராம நிர்வாக அலுவலர்கள் ஆர்ப்பாட்டம்
இடம்: கடலூர், பண்ருட்டி,

*Daily Thanthi*, **13.03.2023**